sam
singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

MATERIAL INTELLIGENCE

# Nafasan Bumi~ An Endless Harvest

## நஃபசான் பூமி ~ ஒரு முடிவற்ற அறுவடை

நஃபசான் பூமி (Nafasan Bumi) ~ ஒரு முடிவற்ற அறுவடை என்பது நமது வாழ்க்கையை வடிவமைக்கும் எளிய பொருள்களிலிருந்து தொடங்குகிறது. பனை எண்ணெய் நமது உணவு, நமது வீடுகள் மற்றும் நமது அன்றாடப் பழக்கவழக்கங்களில் கலந்திருக்கிறது. மின்கலன்கள் முதல் அன்றாட மின்னணுக் கருவிகள் வரை நாம் சார்ந்திருக்கும் தொழில்நுட்பங்களுக்குள் நிக்கல் உலோகம் இருக்கிறது. எலியா நூர்விஸ்டா (Elia Nurvista) மற்றும் பாகுஸ் பாண்டேகா (Bagus Pandega) ஆகியோரின் படைப்புகளின் மூலம், இக்கண்காட்சி இப்பொருள்களை அவற்றின் தோற்றுவாய்களுக்கே பின்னோக்கிச் சென்று, இன்றைய நமது வாழ்க்கை முறையை ஏற்படுத்திக்கொடுக்க எவ்வகையான வாழ்க்கை முறைகள், நிலப்பரப்புகள் மற்றும் உழைப்பு ஆகியவை காரணமாக இருந்திருக்கின்றன என்று கேள்வி எழுப்புகிறது.

'நஃபசான் பூமி', அதாவது "புவியின் சுவாசம்", புவி நமக்குக் கொடுப்பதற்கும் நாம் அதிலிருந்து எடுத்துக்கொள்வதற்கும் இடையிலான உடையக்கூடிய சமநிலையைப் பற்றிப் பேசுகிறது. இன்று, பனை எண்ணெய் மற்றும் நிக்கலுக்கான உலகின் தேவையின் பெரும்பகுதி இந்தோனேசியாவால் முழுமை செய்யப்படுகிறது. அங்குள்ள தோட்டங்களும் சுரங்கங்களும் தொலைவில் உள்ளவையோ அல்லது கற்பனையான இடங்களோ அல்ல. இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் மலேசியா முழுவதும் பரவும் பருவக்காலப் புகைமூட்டத்தைப் போலவே, அவற்றின் விளைவுகளும் பயணிக்கின்றன; அவை பொதுவான காற்றிலும் பொதுவான விளைவுகளிலும் கலக்கின்றன. இக்கண்காட்சி அந்நிலையை எண்ணிப் பார்க்கிறது: வளங்களைச் சுரண்டுவது ஒரு தொடர் நிகழ்வாகிவிட்ட ஒரு தருணம், மேலும், முடிவற்ற அறுவடையால் புவியின் சுவாசம் திணறடிக்கப்படுவதாக உணரும் ஒரு நிலை.




## பாகஸ் பாண்டேகா
## (Bagus Pandega) (பிறப்பு 1985, இந்தோனேசியா)

### ① *L.O.G (Lenyap Oleh Gerigi)* (பற்றொடர் கூர்வாள்களால் காணாமல் போனது)

2026

போர்னியோ ஆசம் (கார்சினியா பார்விஃபோலியா), கிராம்பு (சிஜிஜியம் அரோமட்டிகம்), இசைப் பெட்டிகள், கம்பியில்லா அலைப்பரப்பி, ஒலிப்பான் மற்றும் தொகுதி இசைப்புருவாக்கி

கலைஞரின் திரட்டு

*L.O.G (Lenyap Oleh Gerigi)* (பற்றொடர் கூர்வாள்களால் காணாமல் போனது) என்கிற படைப்பில், பாகஸ் பண்டேகா, கலிமந்தனில் (Kalimantan) இருந்து வந்த அரிய கடின மரமான போர்னியோ அசாம் (Borneo asam) என்ற மரத்தின் ஒரு மரக்கட்டையில் பொருத்தப்பட்ட இயந்திர இசைப் பெட்டிகளை அமைக்கிறார். Piezoelectric உணரிகள் எனப்படும் அதிர்வுகளை ஆற்றலாக மாற்றும் கருவிகள், அவரது அறை முழுவதும் அவர் தொடர்புடைய வேலையான *L.O.O.P* (குறைந்த கரிம இயக்கச் செய்முறை) எனப்படும் குறைந்த கரிம இயக்கச் செய்முறையில், ஓர் உலோகப் படுகைக்குள் விழும் நிக்கல் தாதுத் துண்டுகளின் அதிர்வுகளை உள்வாங்குகின்றன. இவ்வதிர்வுக்குறிகள் இசைப் பெட்டிகளைத் தூண்டுகின்றன, இரண்டு நிறுவல்களையும் தொடர்ச்சியான ஒலி வளையத்தில் இணைக்கின்றன. பிரித்தெடுப்பதன் தாக்கங்கள், உடனடியாகத் தெரியவில்லை என்றாலும், எதிரொலிப்பு மூலம் வெளிப்படும் என்று இப்படைப்பு அறிவுறுத்துகிறது.

## எலியா நூர்விஸ்டா
## (Elia Nurvista) (பிறப்பு 1983, இந்தோனேசியா)

### ② சைபோர்க் *(Cyborg)*

2026

3D அச்சிடப்பட்ட சிற்பம், நுண்ணிழை, பிசின், அலுமினியம், தண்ணீர்க் குழாய் மற்றும் LED விளக்கு

### ③ களைத்துப்போன

2026

பருத்தித் துணியில் ‘பாட்டிக்’ நுட்பம் மற்றும் பனை எண்ணெய் மெழுகு

கலைஞரின் திரட்டு

எலியா நூர்விஸ்டாவின் ‘சைபோர்க்’ கதாபாத்திரம், எண்ணெய்ப் பனை மரங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகிற ஓர் உலகில் நடப்பதாய் எடுக்கப்பட்டுள்ள ‘தோட்டத் துயரம்’ திரைப்படத்தின் ஒரு மையப் பாத்திரமாகும். சைபோர்க், தோட்டங்களின் அதிகாரத்துக்கு ஆளுருவமளித்து, அதன் உரிமை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புகளை உள்ளடக்கியுள்ளது. திரைப்படத்தில், சைபோர்க் புள்ளிவிவரங்களையும் நிலைமைகளையும் தெரிவிக்கிறது; அதன் தனியுரை ஒப்புதல் வாக்குமூலத்திற்கும் கணக்கீட்டிற்கும் இடையில் ஊசலாடுகிறது. இக்கதாபாத்திரத்தின் மூலம், முதலீடு, தொழில்நுட்பம் மற்றும் உணர்ச்சி ஆகியவை ஒரே குரலில் ஒன்றிணைகின்றன; அங்குத் துக்கமும் குற்றவுணர்ச்சியும் கூட தரவுகளாகவே கையாளப்படுகின்றன.

எலியாவின் ‘எக்ஸாஸ்டட்’ பனைஎண்ணெய் மெழுகைஒரு நினைவுப் பொருளாக மாற்றுகிறது. நடந்து கொண்டிருக்கும் ‘லாங் ஹேங்கிங் ஃப்ரூட்’ தொடரின் ஒரு பகுதியாக உருவான ‘தி ரூட்’ (2024) என்ற பட்டிக் படைப்பிலிருந்து இது விரிவடைகிறது. அந்த முந்தைய படைப்பு, பனைஎண்ணெய் மற்றும் டச்சு–ஆப்பிரிக்க மெழுகு அச்சுகளின் பின்னிப்பிணைந்த வரலாறுகளைஆராய்ந்தது. பட்டிக்கின் மெழுகு-எதிர்ப்பு செயல்முறையைப் பயன்படுத்தி, இந்தப் புதிய படைப்பு, பனைமரங்களையும், ஒரு தோட்டத்திற்குள் உள்ள பழங்களையும், அவற்றைஅறுவடைசெய்யும் கைகள் மற்றும் உடல்களையும் சித்தரிக்கிறது. இந்த உடல்கள் நச்சுத்தன்மையுள்ள சூழ்நிலைகளில் விகாரமடையும் நிலையில் காணப்படுகின்றன. தோட்டங்களைத் தாங்கி நிற்கும், கண்ணுக்குத் தெரியாத உழைப்பால் பாதிக்கப்படும் பெண்களின் மீது இந்தப் படைப்பு கவனத்தைஈர்க்கிறது.




## பாகஸ் பாண்டேகா
## (Bagus Pandega) (பிறப்பு 1985, இந்தோனேசியா)

### ④ *L.O.O.P*
### (குறைந்த கரிம இயக்கச் செய்முறை)

2026

நிரல்படுத்தப்பட்ட மோட்டார் பொருத்தப்பட்ட பொருட்கடத்திப்பட்டை இயந்திரம், வெப்பமண்டலத் தாவரங்கள், நிக்கல் தாது மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட மின் உயிரியல் பின்னூட்ட வாங்கி

### ⑤ குரத் லாரா (தழும்புகள்)

2026

நேரடி ஒளிபரப்பில் மூன்று-ஒளிவழிக் காணொளி, 16:9 தோற்றவிகிதம், நிக்கல் தகடுவேய்ந்து செப்பு முலாம் பூசப்பட்ட சிற்பம், தானே தயாரித்த நிக்கல் பூச்சுக் கரைசல் மற்றும் மீன் தொட்டி

### ⑥ புவியின் அமைப்பு

2025

நிரல்படுத்தப்பட்ட மோட்டார் பொருத்தப்பட்ட பொருட்கடத்திப்பட்டை இயந்திரம், தானே மாற்றியமைத்த டிரிப்டெரான் (Tripteron) முப்பரிமாண அச்சுப்பொறி, சிடோவர்ஜோ (Sidoarjo) சேற்று இழை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட துளைப்பலகை, தொடர் சுழற்சியில் ஒற்றை-ஒளிவழிக் காணொளி, 9:16 தோற்றவிகிதம், 9 வினாடிகள்

கலைஞரின் திரட்டு

காணொளி: தனிப்பட்ட திரட்டு

L.O.O.P (குறைந்த கரிம இயக்கச் செய்முறை) என்பது தொடர்ச்சியான சுழற்சிகளில் சிக்கியுள்ள பிரித்தெடுப்பு அமைப்புகளைப் பற்றியது. நிக்கல் தாதுவின் துண்டுகள் பத்து மீட்டர் நீளமுள்ள ஒரு பச்சை நிறக் கடத்தும் பட்டையில் சீரான தாளத்தில் பயணிக்கின்றன. இந்த இயக்கம் இயந்திரத்தனமாகத் தோன்றினாலும், அதன் வேகம் எந்த இயந்திரத்தாலோ அல்லது மனிதனாலோ நிர்ணயிக்கப்படவில்லை. மாறாக, அஃது அருகிலுள்ள வெப்பமண்டலத் தாவரங்களிலிருந்து வரும் உயிரியல் பின்னூட்டத்திற்கு ஏற்றபடிச் செயல்படுகிறது. இச்சுழற்சியின் முடிவில், தாது ஒரு கூர்மையான, எதிரொலிக்கும் ஒலியுடன் ஓர் உலோகத் தொட்டியில் விழுகிறது. இச்செயலின் மூலம், சுரங்கத் தொழில் பற்றி வேறுபட்ட ஒரு சிந்தனை முறையை இப்படைப்பு முன்வைக்கிறது: அதில் இயற்கைச் செயல்முறைகள் அமைப்பைப் பாதிக்கின்றன, மேலும் இயற்கை ஒரு வளமாகக் கருதப்படுவதிலிருந்து மாறி, ஒரு செயலில் உள்ள சக்தியாக மாறுகிறது.

L.O.O.P-க்குள் உள்ள மற்றொரு படைப்பான ‘குரத் லாரா’ (தழும்புகள்), பணியிடத்தில் அத்துமீறலுக்கு ஆளான நிக்கல் சுரங்கத் தொழிலாளி பக்ஜாவின் (Bagja) தலையின் செம்பு பூசப்பட்ட சிற்பத்தைக் கொண்டுள்ளது. இச்சிற்பம் ஒரு மின்பகுளிக் கரைசலைக் கொண்ட தொட்டியில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. அங்கு ஓர் இயற்கையான இரசாயன செயல்முறையின் மூலம், தலையின் மீது படிப்படியாக நிக்கல் முலாம் அடுக்குகளாகப் பூசப்படுகிறது. இச்செயல்முறை L.O.O.P-இல் பொருத்தப்பட்ட திரைகளில் நேரலையாக ஒளிபரப்பப்படுகிறது.

நேரடிப் படம் தலைகீழாக மாற்றப்பட்டு, உயரும் ஹைட்ரஜன் குமிழ்களை மழை, கண்ணீர் அல்லது வியர்வையை ஒத்த கீழ்நோக்கிய வீழ்ச்சியாக மாற்றுகிறது. இந்தோனேசியா உலகின் மிகப்பெரிய நிக்கல் உற்பத்தியாளராக உள்ளது, மேலும் தீவிரமாகச் சுரங்கம் தோண்டுவது காடழிப்பு, நீர்வழிகள் மாசுப்பாடு மற்றும் மண் நச்சாதலுக்கு வழிவகுத்தது. குராட் லாரா, இச்சூழல்களில் நிலவும் பலவீனமான தொழிலாளர் நிலைமைகளின் மீது கவனத்தை ஈர்ப்பதோடு, நிக்கல் நம்முடைய வாழ்க்கையுடன் எவ்வளவு நெருக்கமாகப் பிணைந்துள்ளது என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறார். நமது கைப்பேசிகள், திரைகள் மற்றும் மின்கலன்களில் இருக்கும் இந்நிக்கல், ஒவ்வொரு நாளும் நம் உடலுக்கு அருகிலேயே இருக்கிறது. நாம் சார்ந்திருக்கும் பொருள்களுடன் நமக்கு என்ன வகையான உறவு இருக்கிறது, மேலும் அவற்றை நாம் உண்மையில் எவ்வளவு அறிந்திருக்கிறோம் என்ற கேள்விகளை இப்படைப்பு எழுப்புகிறது.

‘புவியின் அமைப்பு’ என்ற படைப்பில், சிறிய முப்பரிமாண அச்சிடப்பட்ட வீடுகள், அல்லி மலர்கள், இறால்கள் மற்றும் அமர்ந்திருக்கும் உருவங்கள் அமைதியான ஊர்வலமாகப் பயணிக்கின்றன. இவ்வடிவங்கள், கிழக்கு ஜாவாவில் 2006-ஆம் ஆண்டு ‘சிடோவர்ஜோ’ சேற்று வெள்ளப் பேரழிவு நடந்த இடத்திற்கு அருகில் ஒரு காலத்தில் வாழ்ந்த மக்களால் வரையப்பட்ட ஓவியங்களை மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. எரிவாயு எடுக்கத் துளையிடும்போது ஏற்பட்ட விபத்திலிருந்து எடுக்கப்பட்ட சேற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட இழைகளைப் பயன்படுத்தி இவை அச்சிடப்பட்டுள்ளன; அவ்விபத்து இன்றும் சேற்றை வெளியேற்றிக்கொண்டே இருக்கிறது. ஒரு காணொளி, இன்னும் சீறிக்கொண்டிருக்கும் அந்நிலப்பரப்பைக் காட்டி, அதன் அளவையும் தொடர்ச்சியையும் வெளிப்படுத்துகிறது. இந்நிறுவல் படைப்பு காலப்போக்கில் வளர்ந்து கொண்டே செல்லும்போது, அஃது இடப்பெயர்வு, இழப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தின் ஒரு பதிவாக மாறுகிறது.




## எலியா நூர்விஸ்டா (Elia Nurvista) (பிறப்பு 1983, இந்தோனேசியா)

### ⑦ தோட்டத் துயரம்

2026

'புது இழ நம்பிக்கை' என்கிற இயக்கத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட திரைப்படம். ஒற்றை ஒளிவழி, 16:9 தோற்றவிகிதம், வண்ணம் மற்றும் ஒலி (பலவழி ஸ்டீரியோ), 30 நிமிடங்கள்

### ⑧ நிழல்வெளியில் உள்ள உடல்கள்: ஒளியின் மென்மையான இயந்திர அமைப்பு

2026

செயற்கைப் பிசின் மற்றும் மெழுகு, பதப்படுத்தப்பட்ட பனை ஓலைகள், பனை எண்ணெய் மெழுகு மற்றும் பனை மரம்

கலைஞரின் திரட்டு

தோட்டப் பொருளாதாரங்களின் பொருள் இயல்புகளைக் கற்பனை செய்யப்பட்ட எதிர்காலங்களுடன் இணைத்து, தோட்டத் துயரம் ஒரு கனவுக் காட்சியை முன்வைக்கிறது, அதில் மரங்கள், தொழிலாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவை ஒருவருக்கொருவர் சோர்வு நிலையில் எதிர்கொள்ளும். மேற்பார்வையாளரான பிரான்சிஸ், தாவரங்களுடன் உரையாடும் டோனா, விஞ்ஞானி வாட்டிமன் மற்றும் உணர்வுள்ள இயந்திரமான சைபோர்க் ஆகிய நான்கு கதாபாத்திரங்கள், முன்னேற்றம், நீதி மற்றும் ஓய்வு குறித்த முரண்பட்ட ஆசைகளை வெளிப்படுத்துகின்றனர். எண்ணெய்ப் பனை மரங்கள் முனகத் தொடங்கி, முறையீடு செய்து, இறுதியில் விளைச்சலைக் கொடுக்க மறுக்கும்போது, ஒரு தாவர வேலைநிறுத்தம் பற்றிய கற்பனை உருவாகிறது. மரங்கள் 'வேலைநிறுத்தம்' செய்யும்போது, அத்தோட்டம் கற்பனையான எதிர்ப்பின் களமாக மாறுகிறது. இஃது, ஒரு நாள் புவியே மறுத்து, பதிலடி கொடுக்கக்கூடுமா என்பதைப் பற்றி சிந்திக்க நம்மைத் தூண்டுகிறது.

மறுமலர்ச்சிக் கட்டடக்கலையின் மொழியைப் பயன்படுத்தி, அதை அமைதியற்றதாக்கும் ஒரு வட்ட மண்டபத்திற்குள் தோட்டத் துயரம் வெளிப்படுகிறது. பளிங்குத் தூண்களுக்குப் பதிலாக, நிழல்வெளியில் உள்ள உடல்கள்: ஒளியின் மென்மையான இயந்திர அமைப்பு என்ற படைப்பின் சிற்பங்களால் வெளியானது தாங்கிப்பிடிக்கப்பட்டுள்ளது. எண்ணெய்ப் பனைத் தோட்டங்களின் எஞ்சிய பொருள்களிலிருந்து உருவங்களும் துண்டுகளும் வெளிப்படுகின்றன; அவற்றில் மனித முகங்கள் செதுக்கப்பட்ட கருகிய பனை மரமும் பின்னப்பட்ட பனை ஓலைச் சிற்பங்களும் அடங்கும். அவற்றில், மனித உருவங்கள் செவ்வியல் சிற்பங்களின் தோரணைகளைப் பிரதிபலிக்கின்றன; இருப்பினும், உருகிய பனை எண்ணெய் மெழுகாலான அவற்றின் மேற்பரப்புகள், கண்ணுக்குத் தெரியாத வெப்பத்தால் உடல்கள் கரைந்து போவதைப் போலத் தோன்றுகின்றன. ஒரு காலத்தில் பேருருவாகத் தோன்றியவை, இப்போது உடையக்கூடியவையாகவும், பலவீனமானவையாகவும், நிலையற்றவையாகவும் உணர்த்துகின்றன; ஏனெனில் கலைஞர் முழுநிறைவின் இலட்சியங்களையும் சித்தரிப்புகளையும் தோட்டத் தொழிலின் இயல்புகளால் மாற்றியமைக்கிறார்.

## வள மூலை

உடனடிப் பிழிகம்பியுணவு (noodles) மற்றும் முடிக்கழுவிக் களிம்பு (shampoo) முதல் மின்னிலக்கத் திரைகள் மற்றும் பாத்திரங்கள் வரை பல அன்றாடப் பொருள்களின் உற்பத்திக்கு பனை எண்ணெயும் நிக்கலும் இன்றியமையாதவை. ஆனாலும், அவற்றைப் பற்றி நாம் உண்மையில் என்ன அறிந்திருக்கிறோம்? இவ்வளங்கள் பகுதி, பனை எண்ணெய் மற்றும் நிக்கலுடன் கலைஞர்களின் ஈடுபாடுகள் குறித்த நுண்ணறிவுகளை வழங்கும் பொருள்களையும் மூலப்பொருள்களையும் ஒன்றிணைக்கிறது, மேலும் இத்தொழில்களால் வடிவமைக்கப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளையும் இஃது எடுத்துக்காட்டுகிறது.

இம்மூலப்பொருள்களும் பொருள்களும், வளங்கள் மட்டுமல்லாமல் உழைப்பு, நிலம் மற்றும் சுற்றுச்சூழலையும் உள்ளடக்கிய ஒரு பரந்த சுரண்டல் வலைப்பின்னலுக்குள் நுழைவதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாகச் செயல்படுகின்றன. ஒரு முழுமையான சித்திரத்தையோ அல்லது திட்டவட்டமான பதில்களையோ வழங்குவதற்குப் பதிலாக, இந்த இடம் பார்வையாளர்களைச் சற்று நின்று, ஆராய்ந்து, இந்த மூலப்பொருள்கள் எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகின்றன என்பதை வடிவமைக்கும் கதையாடல்களையும் ஊடகங்களையும் கேள்விக்குள்ளாக்க அழைக்கிறது.

இவ்வளங்கள் பிரிவு, SAM-இன் கண்காட்சிக் காப்பாளர், அணுகல் மற்றும் கற்றல் குழுக்களின் கூட்டு முயற்சியாகும். இதில் Kontinentalist வழங்கும் தரவுக் காட்சிப்படுத்தல் மற்றும் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர் பிரிகிட்டா இசபெல்லாவின் (Brigitta Isabella) பங்களிப்புகளும் அடங்கும்.

## பணிமேடை

SAM-இன் அணுகல் குழுவால் தயாரிக்கப்பட்ட இப்பணிமேடை, பல-புலன்வழி அணுகலை வழங்குகிறது. கலைப்படைப்புகளில் உள்ள பொருள்களிலிருந்து பெறப்பட்ட அன்றாடப் பொருள்கள் மூலம் உங்கள் தொடுதல் மற்றும் நுகர்தல் புலன்களை ஈடுபடுத்துங்கள். இப்பணிமேடையில் பாகுஸ் பாண்டேகா மற்றும் எலியா நூர்விஸ்டா ஆகியோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளின் தொட்டுணரக்கூடிய புடைப்பு அச்சீடுகளும் அடங்கும். இந்த அச்சீடுகள் காட்சி வடிவங்களைத் தொட்டுணரக்கூடிய மொழியாக மொழிபெயர்த்து, இக்கண்காட்சியில் உள்ள கலைப்படைப்புகளையும் கதைகளையும் தொடுதல் மூலம் அனுபவிக்க மற்றொரு வழியை வழங்குகின்றன.